1974 மார்ச் 27]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, ராஜாங்கமும் சேர்ந்திருக்கிறார்கள், எனவே கொடுக்கக்கூடாது என்றுதான் பலரும் கூற முடியும்.

ராஜேஸ்வர சேதுபதி பாலம்

***632 வினா—திரு. த. சோனையா:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை வைகை ஆற்றில் உள்ள ராஜேஸ்வர சேதுபதி பாலம் பழுதுபட்டு இருப்பது உண்மையா?

(இ) அந்தப் பாலத்தைப் பழுது பார்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) ஆம், பழைய பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டும் திட்டம் தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலைத்துறை) மட்டத்தில் பரிசீலனையில் உள்ளது.

திரு. த. சோனையா: தலைவரவர்களே, மானாமதுரை வைகையின் குறுக்கே இருக்கும் பாலம் ராஜராஜேஸ்வர சேதுபதி பாலம் என்று அந்தக் காலத்தில் கட்டப்பட்ட பாலம். அந்தப் பாலம் மிகவும் பழுதடைந்திருப்பதால், அது மட்டுமல்லாமல் அதற்கு அருகில் ஒரு தரைப் பாலமும் இருக்கிறது. அதில் பெரும் பகுதி உடைந்துபோய் சேதப்பட்டிருக்கிறது. எனவே புதிய பாலத்தை கட்டித் தரும் இந்த அரசு அந்த அருகிலே உள்ள தரைப் பாலத்தையும் சேர்த்து அதையும் செப்பனிட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ஏற்கனவே இருந்து வருகிற பாலம் மிகவும் கீலமாக இருக்கிறது, எடை தாங்கக் கூடியதாக இல்லை என்று புதுப்பிக்க வேண்டுமென்று அரசு யோசித்து ஆராய்ந்து வருகிறது. மதிப்பீட்டில் ஏறக்குறைய 35 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று நம்பப்படுகிறது. அந்த ஆராய்ச்சி முடிந்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.